மாந்தை கிழக்கு பிரதேசசபை

முல்லைத்தீவு மாவட்டம்

---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

---------------------------

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 20 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூன் 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்ரெம்பர் 15 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இந்த அறிக்கையின் 1.3 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 2013 நிதியாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

i. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங் களின் எண்ணிக் கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 01 | 1இ675 | | |
| அதிகரித்துக் கூறல்கள் | | | 02 | 357இ445 |
| வகைப்படுத்தல் | | | 01 | 2இ500 |

ii. அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 22 வகையான நன்கொடைகளின் பெறுமதி கணிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

iii. சபையின் பாவனையிலுள்ள நான்கு வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளில் சொத்தாக காட்டப்பட்டமையால் வாகனங்களின் பெறுமதி கணக்குகளில் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.

1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

---------------------------------------------------------

நீதிமன்றத் தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும் பிரதான பேரேட்டின்படி ரூபா 10இ172இ454 ஆக காணப்படுகின்றபோதும் இறுதிக் கணக்குகளில் ரூபா 10இ012இ799 ஆக காணப்படுகிறது

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

---------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 415இ130 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.4 இணக்கமின்மைகள்.

-----------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| 1988ம் ஆண்டின் நிதிநிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் ஏ பிரிவு 140 | உரிய திகதியில் முற்பணம் செலுத்தத் தவறும்போது செயலாளர் நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 1,377,412 பெறுமதியான முற்பணம் சீர் செய்யப்படாதுள்ளது. |
| 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் பிரிவு 132 (ஏ) | 2013.06.19 ம் திகதி வரையப்பட்ட ரூபா 1050 பெறுமதியான 288366 இலக்க மாற்றப்படாத காசோலை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடிவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிதி ஒழுங்கு விதி அத்தியாயம் 06 பிரிவு 05 உப பிரிவு 237 | களியாட்ட விடயமொன்றிற்காக ரூபா 1000 இற்கு மேற்பட்ட செலவினத்திற்கு அமைச்சின் முன் அனுமதி இல்லாது சபை நிதியில் ரூபா 40,958 செலவு செய்யப்பட்டுள்ளது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------------------------

### 2.1 நிதிசார் விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 10இ944இ203 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன்

ஒப்பிடும் போது மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 1இ065இ559 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

---------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 5இ499இ877 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 1இ129இ951 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்

----------------------------

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

----------------------------------------------------------------------------------------------------------------

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | - | - | - |
| குத்தகை வாடகைகள் | 250 | 202 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,340 | 225 | - |
| வேறு வருமானங்கள் | 1,600 | 10,375 | 10,081 |
| | 5,190 | 10,802 | 10,081 |

2.3.2 நீதிமன்ற தண்டப்பணங்களும்

நீதவான் நீதிமன்றிலிருந்து பெறப்பட வேண்டிய குற்றப்பணங்களும் தண்டப்பணங்களும் ரூபா 10இ012இ799 வருமானமாகவும் வருமதியாகவும் கணக்கிடப்பட்டதேயன்றி அறவிடுவதற்கு ஆக்க பூர்வ நடவடிக்கை எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 நிலுவை வருமானங்கள்

-----------------------------------

i. மீளாய்வாண்டில் கடைவாடகை, குத்தகை நிலுவை அறவீடுகள் ரூபா 68,054 அறிக்கையிடும் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

ii. உள்;ராட்சி ஆணையாளரின் 1994 ஒக்ரோபர் 04ம் திகதிய எல்சிபி.:.பிஎல்.:.4.:.7.:.19 இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் 5 வருடங்களுக்கு ஒருதடவையாவது மீள் மதிப்பீடு செய்யப்பட்டு திருத்தப்பட்ட வாடகை அறவிடப்படவேண்டிய போதிலும் சுற்று நிருபத்தின் பிரகாரம் சபையின் கடைகள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்து முகாமைத்துவம்

------------------------------------

i. உலக உணவுத் திட்டத்தின் கீழ் சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட பின்வரும் பொருட்கள் பயன்பாடின்றி களஞ்சிய அறையில் காணப்படுகின்றது.

| <u>பொருள் வகை</u> | <u>எண்ணிக்கை</u> |
|---|---|
| தள்ளுவண்டி | 26 |
| மண்வெட்டி | 122 |
| சவள் | 43 |
| காட்டு கத்தி | 03 |
| சிறிய கத்தி | 08 |
| பூவாளி | 04 |

ii. உள்;ராட்சி ஆணையாளரினால் 2011ம் ஆண்டில் வழங்கப்பட்ட 02 எண்ணிக்கையான மின்பிறப்பாக்கி மற்றும் 02 எண்ணிக்கையான நீர்

இறைக்கும் இயந்திரம் என்பன சபையில் 3 வருடங்களாக பயன்பாடின்றி களஞ்சிய அறையில் காணப்படுகின்றது.

iii. மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மின் விளக்கு இணைப்பு பொருட்கள் பயன்பாடின்றி சபை களஞ்சியத்தல் காணப்படுகிறது.

2.5 செயற்பாடுகளின் செயற்திறமையின்மை

---------------------------------------------------------------

மீளாய்வாண்டில் அபிவிருத்தி நிதிய ஒதுக்கத்திற்கு ரூபா 10,802,822 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் ஒதுக்கீட்டு வேலைகள் நிறைவேற்ற நிலையான வைப்பில் 4 மில்லியன் மட்டுமே வைப்பிலிடப்பட்டுள்ளது. அபிவிருத்தி ஒதுக்கத்திற்கு ஈடான நிலையான வைப்புக்கள் காணப்படாமை செயற்பாடுகள் செயற்திறமையின்மையை காட்டுகின்றது.

3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. முற்பணங்கள்

ii. வருமான சேகரிப்பு

iii. நிலையான சொத்து